Registered as a Newspaper

விலை ரூ. 50 பக்கங்கள் 12

# உதயன்

சுடர் : 38
கதிர் : 114

திங்கட்கிழமை 20 மார்ச் 2023 பங்குனி 06 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"இனித்தான் உத்தியோகபூர்வ முடிவு எண்டா இவ்வளவு நாளும் பகிடிக்கோ எலக்சன் எண்டவை?"

## வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கைக்கு இப்போது மீட்சி!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மூச்சுவிடும் சூழலை சர்வதேச நாணய நிதியம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இலங்கை தற்போது வங்குரோத்தடையும் நிலையில் இல்லை. அந்த நிலையில் இருந்து நாம் விடுபட்டுள்ளோம் – என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

»11



### ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்., மார்ச் 20
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப் பகுதியில் உயிர்கொல்லி போதைப்பொருளானஹெரோய்னை உடைமை »11



உள்ளூராட்சித் தேர்தல்

### கட்சிகளுடன் பேசியபின்னர் உத்தியோகபூர்வ முடிவாம்!

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20
அரசியல் கட்சிகளுடனான பேச்சுக்களைத் தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும். சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்த அர்ப் »11

### உள்ளூராட்சி சபைகள் நேற்றுடன் கலைந்தன

கொழும்பு, மார்ச் 20
நாடளாவிய ரீதியிலுள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களில் 340 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் »11

### நீதிமன்றங்களுடன் விளையாடவேண்டாம்

ரணிலுக்கு சட்டத்தரணிகள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 20
நீதிமன்ற தீர்ப்புக்கு நிறைவேற்று அதிகாரி கீழ்ப்படாவிட்டால், சாதாரண மக்கள் எவ்வாறு கீழ்ப்படி »12

### மயக்கமருந்து கொடுத்து யுவதி மீது வன்புணர்வு!

அச்சுவேலியில் கொடூரம் சந்தேகநபரொருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 20
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், மயக்கமருந்து கொடுத்து யுவதியொருவர் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளார்.
மூவர் அடங்கிய குழுவினர் வன்புணர்வுக்கு உட்படுத்தினார்கள் என்று யுவதியின் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றபோதிலும், »10

### பன்றித்தலைச்சி அம்மனுக்கு பங்குனித்திங்கள் உற்சவம்

சாவகச்சேரி, மார்ச் 20
வரலாற்றுப் பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது. »12

### பெண்ணொருவரிடம் சங்கிலி அபகரிப்பு!

ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 20
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் சந்தியில் பெண்ணொருவரிடமிருந்து »10

உள்ளூராட்சித் தேர்தல் விவகாரம்;

### உயர்நீதிமன்ற உத்தரவை விசாரணைசெய்யமுடியாது

நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு சர்வதேச ஜுரிகள் குழு கண்டனம்

கொழும்பு, மார்ச் 20
உயர்நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவுக்கு மதிப்பளிக்க மறுப்பதும், அதனை நாடாளுமன்றக்குழுவில் விசாரணைக்கு உட்படுத்துவதும் ஏற்கனவே நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை ஆபத்தான நிலையிலுள்ள இலங்கைக்கு மிகமோசமானதொரு முன்மாதிரியாகவே அமையும் என்று சர்வதேச ஜுரிகள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.
அதுமாத்திரமன்றி உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான நிதி வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் உயர்நீதிமன்றத் »11

### முடிவுக்கு வந்தது டொலர் நெருக்கடி

மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20
டொலர் நெருக்கடி முடிவுக்கு வந்துவிட்டது என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- »11

### குளத்திலிருந்து சடலம் மீட்பு!

வவுனியாவில் சம்பவம்

வவுனியா, மார்ச் 20
வவுனியா குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள குளத்தில் இருந்து நேற்றையதினம் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.
குளத்தின் வான் பகுதியில் »12

### யாழ்.சிங்கள மகா வித்தியாலயம் இராணுவத்துக்கு தாரைவார்ப்பு?

யாழ்ப்பாணம், மார்ச் 20
யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயப் பாடசாலைக் கட்டடத்தை முழுமையாக இராணுவத்துக்குக் கைமாற்றுவதற்கான நடவடிக்கைகளில் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மத்திய கல்வி அமைச்சுடன் இணைந்து ஈடுபட்டிருக்கும் தகவல் வெளியாகியிருக்கிறது. »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கைக்கு சாதகமாகத்தான் நாணய நிதியம் முடிவெடுக்கும்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 20


சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை, இலங்கைக்குச் சாதகமான தீர்மானத்தை எடுக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அலி சப்ரி மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுச் சபையானது இன்று திங்கட்கிழமை கூடவுள்ள நிலையில் இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர் வழங்குவது தொடர்பில் தீர்மானமொன்று எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாம் சர்வதேச நாணயநிதியத்துடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். அதில் பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டிருக்கின்றோம். குறிப்பாக, சர்வதேச நாயணநிதியத்துடனான ஆரம்பகட்டப் பேச்சுக்களில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டார். தொடர்ந்து நடைபெற்ற பேச்சுக்களில் பணியாளர் மட்ட ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதன்பின்னர் எமக்கான நிதி வழங்குவதற்குரிய வரையறைகளை படிப்படியாக முன்னெடுத்துள்ளோம். அத்துடன், இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட பெரும் கடன்வழங்குநர்கள் கடன்மறுசீரமைப்பு உறுதிப்பாட்டுக் கடிதத்தை வழங்கியுள்ளார்கள். அவ்விதமான செயற்பாடுகளின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக் கொள்வதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் முறையாகப் பூர்த்தி செய்துள்ளோம்.

அந்த அடிப்படையில் நிறைவேற்றுக் குழுவானது இலங்கையின் விடயங்களை ஆராய்ந்து சாதகமான தீர்மானத்தை எடுக்கும் என்று நம்பிக்கையுள்ளது - என்றார். (ம)



## இறக்குமதி முட்டைக்கு வரிக்குறைப்பு

கொழும்பு, மார்ச் 20

இறக்குமதி செய்யப்படும் முட்டைக்கான வரி நேற்றுமுன்தினம் இரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

அதற்கமைய ஆயிரத்து 300 ரூபாவாக இருந்த முட்டைக்கான வரி 200 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. (ச-இ)


# இலங்கையில் அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கங்கள்!

கொழும்பு, மார்ச் 20

இலங்கையில் அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன என்று புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

கிரிந்த பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை சிறியளவிலான நிலநடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளது.

இது ரிக்டர் அளவுகோலில் 2.6 அலகுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கோமரங்கடவல பகுதியிலும் நிலநடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளது. (ம)



## வடக்கில் மழை!

யாழ்ப்பாணம், மார்ச் 20

வடக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் இன்று மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

நாட்டின் பல பிரதேசங்களில் இன்று பிற்பகல் அல்லது இரவுவேளைகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். அதன்படி மேல், சப்ரகமுவ, மத்திய, வடமத்திய மாகாணங்களின் சில பிரதேசங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும். அவ்வாறு இடியுடன் கூடிய மழை பெய்யும்போது தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

அதேவேளை இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் குறிப்பிட்ட அந்தப் பிரதேசங்களில் உள்ள கடற்பரப்புகளில் அவ்வப்போது பலமான காற்றும் கடல் கொந்தளிப்பும் காணப்படலாம் - என்றுள்ளது. (ம)

## மாணவர்கள் கௌரவிப்பு

கொடிகாமம் - மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் கடந்த வருடம் நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் க. இளங்கோவன் தலைமையில் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது. (ய-159)

## நுரைச்சோலையில் மீண்டும் கோளாறு

கொழும்பு, மார்ச் 20

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்றாம் மின்னுற்பத்தி இயந்திரக் கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டுள்ளது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்றாம் மின்னுற்பத்தி இயந்திரக் கட்டமைப்பில் விரைவில் பெரும் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படவிருந்தது. இந்த நிலையில் அந்த இயந்திரக் கட்டமைப்பு தற்போது பழுதடைந்துள்ளது. எனினும் இந்தப் பழுதால் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது. தடையில்லாத மின்சாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம)

## தமிழரசுக் கட்சியின் உறுப்பினருக்கு குற்றத்தடுப்புப் பிரிவு அழைப்பாணை!

கிளிநொச்சி, மார்ச் 20

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அவருக்கு இந்த எழுத்துமூல அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அந்த அழைப்பாணையில் விசாரணைக்கான காரணங்கள் எவையும் குறிப்பிடப்படாது, வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காக எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9 மணிக்கு பரந்தரனில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவுக்கு சமூகமளிக்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை- கிளிநொச்சி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய 3 உள்ளூராட்சி மன்றங்களினதும் தவிசாளர்கள் உள்ளிட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 9 உறுப்பினர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-113)

# வவுனியாவில் 3 வீடுகளில் கொள்ளையர் கைவரிசை!

## இருவர் மருத்துவமனையில்

வவுனியா, மார்ச் 20

வவுனியா - கள்ளிக்குளம் கிராமத்தில் தொடர்ச்சியாக 3 வீடுகளுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்தோரை அச்சுறுத்திவிட்டுக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. [illegible] கும் வீடொன்றுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அவர்கள் அணிந்திருந்த நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். அதன்பின்னர் மறு வீடொன்றுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கு 5 பவுண் நகைகள் மற்றும் 18 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். தொடர்ச்சியாக மூன்றாவது வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் காயமடைந்த இருவரை மீட்டு வவுனியா பொது மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிக்கப்பட்ட ஸ்ரூடியோக் கழிவுகள் நிறுவனத்தினரால் புதைக்கப்பட்டன

*யாழ்.சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை*

சாவகச்சேரி, மார்ச் 20

நாவற்குழிப் பகுதியில் குடியிருப்புகளற்றுக் காணப்பட்ட வீதியோர காணிக்குள் புகைப்படக் கழிவுகளைக் கொட்டி எரித்த நிறுவனத்தினர், அந்தக் கழிவுகளை குழிவெட்டிப் புதைத்துள்ளனர்.

புகைப்பட ஸ்ரூடியோக் கழிவுகள் பெருமளவில் வாகனத்தில் கொண்டுவரப்பட்டு அந்தக் காணிக்குள் அண்மையில் எரிக்கப்பட்டன. குப்பையிலிருந்து எழுந்த புகையால் பாதிப்படைந்த அயலிலுள்ள இரு குடும்பங்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த பின்னர் குடியிருப்புக்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

முறைப்பாட்டையடுத்து கழிவுகள் கொட்டுவதற்கு சூழல் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டதா என சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த விடயம் ஊடகங்களில் வெளிவந்ததையடுத்து யாழ்ப்பாண சுகாதாரத் திணைக்கள சுற்றாடல் மற்றும் தொழில்சார் சுகாதாரப் பொறுப்பதிகாரி மருத்துவர் நிக்ஸன், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சி.சுதோகுமார், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.கர்ணன் மற்றும் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.பிரகாபரன் ஆகியோர் நாவற்குழிப் பகுதிக்குச் சென்று கழிவுகள் கொட்டப்பட்டு எரிக்கப்பட்டதைப் பார்வையிட்டனர்.

அதன்பின்னர் கழிவுகளைக் கொட்டி எரித்த புகைப்பட நிறுவனத்தின் பிரதிநிதியை அழைத்து உரையாடியதையடுத்து அதே காணியில் கனரக வாகனம் மூலம் குழி வெட்டப்பட்டு எரிக்கப்பட்ட கழிவுகள் புதைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,9)

## மாணவர்களை ஏற்றாது செல்லும் பஸ்கள்

# பிரச்சினையை வெளிப்படுத்திய ஊடகவியலாளருக்கு மிரட்டல்!

**முல்லைத்தீவு, மார்ச் 20**

**பாடசாலை மாணவர்களை ஏற்றாமல் பஸ்கள் செல்வது தொடர்பில் செய்தி வெளியிட்டமைக்காக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று ஊடகவியலாளர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.**

மட்டக்களப்பு இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியர் ஒருவரே அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பனிக்கன்குளம் மற்றும் கிழவன்குளம் கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களை பஸ்கள் ஏற்றிச் செல்லாமையால் அவர்கள் பல ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் பருவகாலச் சீட்டைகளைப் பெற்றும் இலங்கை போக்குவரத்துச்சபை பஸ்கள் ஏற்றாமல் செல்லும் நிலை தொடர்கின்றது என்றும், மாணவர்கள் பாடசாலை செல்வதிலும், மீண்டும் வீடு திரும்புவதிலும் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த 13 ஆம் திகதி பாடசாலையில் பரீட்சைநடைபெற்றநிலையில் மாணவர்களை பஸ்கள் ஏற்றிச் செல்லாத நிலையில் மாணவர்கள் வீதியில் அந்தரித்ததை அவதானித்த ஊடகவியலாளர் ஒருவர் இந்த விடயத்தை மாங்குளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினார்.

அதையடுத்து போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் வரவழைக்கப்பட்டு காலை 8.12 மணிக்கு வீதியில் வந்த மட்டக்களப்பு சாலைக்கு சொந்தமான யாழ்ப்பாணத்தில் இருந்து கல்முனை நோக்கிச் சென்ற பஸ் ஒன்று நிறுத்தப்பட்டு மாணவர்கள் ஏற்றி விடப்பட்டனர் அப்போது பொலிஸாருடன் அந்த பஸ் சாரதி தர்க்கப்பட்டதோடு, அங்கு செய்தி சேகரித்த ஊடகவிய லாளருடன் தர்க்கித்து அச்சுறுத்தினார் என்று கூறப்படுகின்றது.

அதன்பின்னர் கடந்த 15 ஆம் திகதி இரவு 20.47 மணிக்கு ஊடக வியலாளருடன் தொடர்பை ஏற்படுத்திய மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர் ஒருவர் ஊடகவியலாளரை கெட்ட வார்த்தைகளால் திட்டி கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-19)



# ரணில் அரசாங்கத்துக்கு எதிராக புத்தூரில் தீப்பந்தப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில், ரணில் அரசாங்கத்தின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக உழைக்கும் மக்களின் தீப்பந்தப் போராட்டம் பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி முதல் நடைபெற்றது.

'66 வீத மின்கட்டண உயர்வை உடன் நிறுத்து', 'உணவு, எரிபொருள் விலைகளைக் குறை', 'மக்களைப் பட்டினிக்குள் தள்ளாதே', 'உள்ளூராட்சித் தேர்தலை உடன் நடத்து', 'வரிகளைச் சுமத்தி மக்களை உறிஞ்சாதே', 'வடபகுதிக் கடல் வளங்களை இந்தியாவுக்கு விற்காதே' உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளரும், மூத்த பொதுவுடைமைவாதியுமான சி.கா.செந்திவேல், வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-14,66)



# அமெரிக்கா விமானங்களில் கடந்த மாதம் வந்தோர் யார்?

*உதயகம்மன்பில கேள்வி*

கொழும்பு, மார்ச் 20

இலங்கைக்கு கடந்த மாதம் வருகை தந்த அமெரிக்கக் குழு தொடர்பில் தகவல்கள் வழங்கப்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்துக்குக் கடிதம் ஒன்றை அவர் அனுப்பியுள்ளார். கடந்த மாதம் சி-17 என்ற இரண்டு விமானங்களில் அமெரிக்க இராஜதந்திரிகள் நாட்டுக்கு வருகை தந்திருந்திருந்தனர் என அறியமுடிகிறது.

அவ்வாறு வருகை தந்த அமெரிக்கக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்துவோரின் பெயர்கள் என்ன? வந்தர்களில் அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் வில்லியம் பர்ன்ஸ் என்பவரும் இருந்தாரா? குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் வந்தவர்களின் கடவுச்சீட்டை சரிபார்த்தார்களா? குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் கடவுச்சீட்டில் முத்திரையிட்டார்களா? சுங்க அதிகாரிகளால் அந்தக் குழு பற்றிய தகவல்களை வெளிப்படுத்தவேண்டாமென யாராவது அறிவுறுத்தினார்களா? உள்ளிட்ட விவரங்களை அறியப்படுத்தவேண்டும் என அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (ச-இ)

# மன்னார் நகரசபையின் நிதியில் பூங்கா, கடைத்தொகுதிகள் திறப்பு

மன்னார், மார்ச் 20

மன்னார் நகரசபையின் 1.5 மில்லியின் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் சாவக்கட்டுப் பகுதியில் அமைக்கப்பட்ட மன்னார் நகரசபை பொது சிறுவர் பூங்கா கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் மன்னார் நகரசபையின் 2022 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மன்னார் பஜார் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள 'மன்னார் நகரசபை நவீன கட்டடத் தொகுதியின்' பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது. மேலும் மனிதநேய சேவையாளரும் மன்னார் மறைமாவட்ட ஆயருமான மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை மறைந்த ஒருவருட நினைவேந்தலை முன்னிட்டு மன்னார் நகரசபையின் 35.45 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கடைத் தொகுதியின் கல்வெட்டுக்களும் திறந்து வைக்கப்பட்டன.

மன்னார் நகரசபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் நகரசபையின் செயலாளர், நகரசபையின் உறுப்பினர்கள் மற்றும் நகரசபை பணியாளர்கள் இணைந்து பூங்கா, கட்டடத்தொகுதிகளைத் திறந்து வைத்தனர். (ஒ-14,56)

# மணல் அகழ்வு வழக்கின்போது சபையின் நிதி பயன்படவில்லை

*நானாட்டான் பிரதேசசபை தவிசாளர் சுட்டிக்காட்டு*

மன்னார், மார்ச் 20

சட்டவிரோத மணல் அகழ்வு குறித்து நீதிமன்றில் நடைபெற்ற வழக்கில் முன்னிலையான சட்டத்தரணிகளுக்கு சபை நிதியிலிருந்து கொடுப்பனவு வழங்கப்படவில்லை என நானாட்டான் பிரதேசசபையின் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

நானாட்டான் பிரதேசசபையின் 62 ஆவது மாதாந்த பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கடந்த காலங்களில் பிரதேசசபையால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

அத்துடன் பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் தனது பேஸ்புக் பதிவில், நீதிமன்றத்தில் நடைபெற்ற மணலகழ்வு வழக்கின்போது சட்டத்தரணிகளுக்கு பிரதேச சபை நிதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டமை சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

சபைக்கு சமுகமளித்திருந்த நிதிக்குழு உறுப்பினர்கள் அதனை மறுத்து தமது மாதாந்தக் கணக்கறிக்கையை சமர்ப்பித்தனர். அதில் எந்தவிதமான எந்தக் கொடுப்பனவும் மணலகழ்வு வழக்குக்கு வழங்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் குறிப்பிட்டார். (ச-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புடினுக்கு பிடியாணை

## சர்வதேச நீதிமன்றம் அதிரடி உத்தரவு



மொஸ்கோ, மார்ச் 20
ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை கைதுசெய்ய பிடியாணை பிறப்பித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
ரஷ்யா அதிபர் விளாடிமிர் புடின் கடந்தாண்டு உக்ரைன் நாட்டுக்கு எதிராகப் போரைத் தொடங்கினார். இந்தப் போர் ஓராண்டைக் கடந்துவிட்டபோதிலும் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இதனால் மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
ரஷ்யா, உக்ரைன் நாடுகள் மட்டுமன்றி உலகின் பல நாடுகளும் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.
இந்தப் போர்க்காலத்தில் ரஷ்யப் படைகள் பல்வேறு விதிமீறல்களிலும் ஈடுபட்டதாக போர்க்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.
உக்ரைன் போர் தொடங்கியது முதலே அங்கு போர்க்குற்றங்கள் நடந்தன. இதற்கு புடினே முக்கிய மான காரணம். இதற்குரிய போதுமான ஆதாரங்கள் உள்ளன என்று ஐ.நா. தரப்பில் கூறப்படுகிறது. உக்ரைனின் கெர்சன் பகுதியில் மட்டும் ரஷ்யா 400 போர்க் குற்றங்களைப் புரிந்துள்ளது என உக்ரைன் அதிபர் ஷெலன்ஸ்கி சாடியிருந்தார்.
அத்துடன் உக்ரைனில் குழந்தைகள் கடத்தல், பலாத்காரம், சித்திரவதை தவிர, உக்ரைனின் எரிசக்தி உட்கட்டமைப்பு மீதான தாக்குதல் உள்ளிட்ட அனைத்துக்கும் ரஷ்யாவே பொறுப்பு என்று ஐ.நா. விசாரணைக்குழு கூறியுள்ளது.
அதற்கமைய இந்தப் போர் தொடர்பான மனுவை விசாரித்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ரஷ்ய அதிபர் புடின் மற்றும் அந்த நாட்டின் குழந்தைகள் உரிமைகளுக்கான ஆணையாளர் ஆகியோரை கைதுசெய்யும் பிடியாணையை பிறப்பித்துள்ளது.
அதேவேளை சர்வதேச நீதிமன்றத்தின் இந்த உத்தரவு அர்த்தமற்றது. எங்கள் நாட்டுக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முடிவுகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என ரஷ்ய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் விளக்கமளித்துள்ளார். (ச-இ)

## நான் வந்துட்டேன் ட்ரம்ப் குதூகலம்!

வொஷிங்டன், மார்ச் 20
அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பேஸ்புக் மற்றும் யூரியூப் தளங்கள் 2 ஆண்டுகளுக்குப் பின்னர் செயற்பாட்டுக்கு வந்துள்ளன.
2017 முதல் 2021ஆம் ஆண்டுவரை அமெரிக்காவின் அதிபராகச் செயற்பட்டு வந்த ட்ரம்ப் 2021 இல் இடம்பெற்ற தேர்தலில் தோல்வியடைந்ததையடுத்து ஜோ பைடன் அமெரிக்க அதிபரானார்.
அந்தத் தோல்வியை ஏற்க மறுத்த ட்ரம்ப் தனது ஆதரவாளர்களிடம் வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார். அதனை தனது பேஸ்புக், ருவிற்றர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் நேரடியாக ஒளிபரப்பினார்.
அதனால் கொதித்த அவரது ஆதரவாளர்கள் அமெரிக்க நாடாளுமன்றத்துக்குள் புகுந்து வன்முறை புரிந்தனர்.
அதனையடுத்து வன்முறையைத் தூண்டியதாக ட்ரம்பின் பேஸ்புக், ருவிற்றர், யூரியூப் உள்ளிட்டவை முடக்கப்பட்டன.
இந்த நிலையில் இரண்டு ஆண்டுகளாக முடக்கநிலையிலிருந்த பேஸ்புக், யூரியூப் என்பன செயற்பாட்டுக்கு வந்ததையடுத்து அவற்றில் 'நான் திரும்ப வந்துட்டேன்' என்று பதிவிட்டு தெறிக்கவிட்டுள்ளார்.
இதேவேளை - 2024ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் அவர் போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## இது ஆரம்பமே

### ஷெலன்ஸ்கி உக்ரம்

கீவ், மார்ச் 20
ரஷ்ய அதிபர் புடினுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணை உத்தரவு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு. இதுதான் ஆரம்பம் என உக்ரைன் அதிபர் ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்;
உக்ரைன் மீது தொடுக்கப்பட்ட போர் ஓராண்டைக் கடந்தும் முடிவை எட்டவில்லை. இந்தப் போரில் உக்ரைன் நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. போர்க்காலத்தில் ரஷ்யப் படைகள் பல்வேறு விதிமீறல்களிலும் ஈடுபட்டுள்ளன. குழந்தைகள் கடத்தல், பலாத்காரம், சித்திரவதை உள்ளிட்ட போர்க்குற்றங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன.
இந்த அநீதிகளுக்கு ரஷ்ய அதிபர் புடின் பொறுப்புக்கூறவேண்டும்.
இந்த நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் புடினுக்கு பிறப்பித்த பிடியாணை உத்தரவு வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு, இது ஆரம்பமே - என்றார். (ச-இ)

## ஆபிரிக்காவை புரட்டிய 'பிரெட்டி' சூறாவளி

### பலி 300ஐ தாண்டியது 5 இலட்சம் பேர் பாதிப்பு

மலாவி, மார்ச் 20
ஆபிரிக்காவை 'பிரெட்டி' என்ற பருவகால சூறாவளி புரட்டிப் போட்டத்தில் பலியானோர் எண்ணிக்கை 300ஐ தாண்டியுள்ளது என அந்தநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதுதொடர்பில் அந்தநாட்டின் பருவகால மாற்றங்களுக்கான அமைச்சகம் வெளியிட்ட தகவலில்,
ஆபிரிக்காவின் தெற்கு மலாவியில் பல்வேறு மாவட்டங்களின் பெரும் பகுதி சூறாவளி தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. சாலைகள் மற்றும் பாலங்களில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. பல இடங்களில் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சூறாவளித் தாக்கத்தால் இதுவரை 326 பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக் கணக்கானவர்களைக் காணவில்லை. 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது. (ச-இ)



## ஜின்பிங் ரஷ்யா பயணம்

பீஜிங், மார்ச் 20
சீன அதிபர் ஜி ஜின்பிங் 3 நாள் பயணமாக இன்று திங்கட்கிழமை ரஷ்யா செல்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக அவர் அதிபர் புடினுடன் பேச்சு நடத்த உள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.
இதுகுறித்து சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹுவா சுன்யிங், "பேச்சுகள்தான் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு என்பதில் சீனா நம்பிக்கை கொண்டிருக்கிறது" - என்றார். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்னை ஏற்படக் கூடும் . கவனம் தேவை. சிலருக்கு எதிர் பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம் :** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியே ஏற்படும். எதிர்பார்த்த காரியம் முடியும்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். நண்பர்கள் மூலம் கிடைக்கும் செய்தி மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த பணம் கிடைக்கக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறை முகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும்.

**விருச்சிகம் :** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கருத்து வேறுபாடுகள் நீங்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேர்தலும் டொலரும்!

நீதியரசர்கள் குழாமை நாடாளுமன்ற சிறப்புக் குழுவில் விசாரிக்கமுடியாது. அவ்வாறு விசாரிப்பதானது நீதித்துறையின் சுயாதீனத்தை கேள்விக்கு உட்படுத்துகின்ற - பலவீனப்படுத்துகின்ற - நடவடிக்கையாகவே அமையும் என்றவாறாக இலங்கைக்கு எச்சரித்திருக்கின்றது சர்வதேச ஜூரிகள் குழு.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதியை விடுவிக்காமல் இருக்க முடியாது. தேர்தலுக்கு என்று ஒதுக்கப்பட்ட நிதியை உடனடியாக விடுவிக்கவேண்டுமென்று உயர் நீதிமன்றம் அண்மையில் தெரிவித்திருந்தது. உயர் நீதிமன்றத்தின் இந்த இடைக்கால உத்தரவையடுத்து தேர்தலை நடத்தவேண்டிய - தேர்தலுக்கு நிதியை விடுவிக்கவேண்டிய தவிர்க்கமுடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது. ஆனால், தேர்தலை நடத்தும் முதுகெலும்புத்தனம் ரணிலுக்கோ, ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கோ கிஞ்சித்தும் இல்லை. எனவே நீதிக் கட்டமைப்புக்கு உட்பட்டுத் தேர்தலை நடத்துவதைவிடவும் நீதிக்கட்டமைப்பையே சவாலுக்கு உட்படுத்திவிடுவது என்ற நிலைப்பாட்டைக் கையிலெடுத்தது 'பெரமுன அரசாங்கம்'.


இதன்படி, நாடாளுமன்ற சிறப்புக் குழுவொன்றை அமைத்து, உயர் நீதிமன்றத்தின் உத்தரவை மறுபரிசீலனை செய்வதற்குத் துணிந்திருக்கின்றது இந்த அரசாங்கம். அதாவது உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளைக் கூட தம்மால் மாற்றமுடியும், மறுபரிசீலனைக்கு உட்படுத்த ம்முடியும், விவாதிக்க முடியும் என்ற செய்திகளைத்தான் அரசாங்கம் தற்போது தந்துகொண்டிருக்கின்றது, இதைத்தான் 'நீதித்துறையின் மீதான பாரதூரமான அத்துமீறல்' என்று கோடிட்டுக்காட்டியுள்ளது ஜூரிகள் குழு. ரணில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்குக் கிடைத்த ஒரு சர்வதேச எதிர்பார்ப்பாகவும் தலைகுனிவாகவும்தான் இதைக்கொள்ள வேண்டியிருக்கின்றது என்றால் அதில் இரண்டாம் கருத்தில்லை.

நாட்டின் பொருளாதாரம் மீண்டு வருகின்றது. டொலருக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடுகள் இல்லாது போகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிகள் கிடைத்த பின்னர் டொலரின் கையிருப்பு மேலும் மேம்படும். இது புதிய முதலீடுகளை இலங்கைக்குள் கொண்டுவரும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நேற்றுமுன்தினம் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார். ஒரு நாட்டின் பொருளாதாரத்தையும், முதலீடுகளின் உள்வருகையையும் வெறுமனே டொலரின் இருப்பும் அதன் சுழற்சியும் தீர்மானிப்பதில்லை. 'சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெறுவதென்பது' அனைத்திலும் மிகமிக முக்கியமானது. அதை இதுவரை இலங்கை சாதித்ததில்லை. இனியும் சாதிக்கப்போவதில்லை என்பதைத்தான் ஜூரிகளின் இந்த அதிருப்தியும் எதிர்ப்பும் மெய்ப்பித்திருக்கின்றது.

இலங்கையின் உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தில் உலகமே தன் கழுகுப் பார்வையை செலுத்தத் தொடங்கியிருக்கின்றது. இதுவொன்றும் ஸ்பெய்னின் கட்டலோனிய மாநிலத்துக்கான தேர்தலைப் போன்று கனதியானதல்ல. ஆயினும் இந்தக் கழுகுப் பார்வைக்கான காரணம், இலங்கை ஜனநாயகத்தைப் பேணுகின்றதா? மக்களாட்சியை மகிமைப்படுத்துகின்றதா? என்ற கேள்விகளுக்கான பதில்களைத் தேடவேண்டிய கட்டாயத்தில், இந்தப் பதில்கள் கிடைக்கும்போதுதான் இலங்கைக்கான நிதி வழங்கலையும், இலங்கையில் முதலிடுவதையும் சர்வதேசம் தீர்மானிக்கும். ஆக, நீதித்துறையின் சுயாதீனத்தை மதித்து, எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகத் தேர்தலை இலங்கை நடத்தி முடிக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு இலங்கை விரைவாக மீண்டுவரும். டொலரின் வருகைக்கான கதவுகளை அடைத்துவிட்டு 'டொலர் வரவில்லை, டொலர் வரவில்லை' என்று கூக்குரலிடுவதால் எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை.

நாளொரு நல்வார்த்தை

பிறர் கூறும் எந்தத் தீர்ப்புக்கும் விமர்சனத்துக்கும் அஞ்ச வேண்டாம், அது அவசியமுமில்லை. என் மனச்சாட்சியின் முடிவுக்கு அஞ்சினால் போதும். - பால்ஸாக்




# உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற வாய்ப்பில்லை

## குமார வெல்கம சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 20

ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறாது. 2024ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலே இடம்பெறும். தேர்தலை பிற்போட்டு மக்களாணையை ஒருபோதும் வெல்ல முடியாது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்கிக்கொள்வார் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயகப் போராட்டத்தின் ஊடாகவே நாட்டு மக்கள் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை வெளியேற்றினார்கள். கோத்தாபய ராஜபக்ச தகைமையற்றவர் என்பதை நான் முதன்முதலாகக் குறிப்பிட்டேன். சிறந்த நபர் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் கேட்டுக்கொண்டேன். கட்சிக்கு முன்னுரிமை வழங்காமல் குடும்பத்துக்கு முன்னுரிமை வழங்கிய மஹிந்த ராஜபக்ச 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக கோத்தாபயவைக் களமிறக்கினார்.

இதனால் இரண்டரை வருடங்களுக்குள் முழுநாடும் வங்குரோத்தடைந்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தற்போதைய பிரதான பேசுபொருளாக உள்ளது.

தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும், தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் தடைகளை ஏற்படுத்தியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி இடம்பெறாது. எப்போதும் இடம்பெறும் என்றும் குறிப்பிடமுடியாது.

2024ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். இழக்கப்பட்ட தனது அரசியல் செல்வாக்கை பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு தடையாகச் செயற்படுகிறார்.

தேர்தலை பிற்போட்டு மக்களாணையை ஒருபோதும் வெல்ல முடியாது என்பதை ஜனாதிபதி ரணில் விளங்கிக் கொள்ள வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் பொதுஜன பெரமுன வெற்றிபெறும் என்ற அச்சத்தால் நல்லாட்சி அரசாங்கம் (மைத்திரி - ரணில் அரசாங்கம்) மாகாணசபைத் தேர்தலை பிற்போட்டது. இதன் தாக்கத்தை ஐக்கிய தேசியக் கட்சி 2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் எதிர்கொண்டது. ஆகவே குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மக்களாணையை மலினப்படுத்தினால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும் - என்றார். (ம)

நாளை 21.03.2023 செவ்வாய்க்கிழமை பங்குனி 07

சுபநேரம் : 10.47 - 12.17
ராகுகாலம் : 03.17 - 04.47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாய விலையில் மரக்கறி விதைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 20
யாழ்.மாவட்ட கமநலசேவை நிலையங்களில் குறைந்த விலையில் மரக்கறி விதைகள் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தோட்டச்செய்கையாளர்களின் நலன்கருதி அவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன என யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி கீரை, பயிற்றை, பாகல், கத்தரி, தக்காளி, மிளகாய், வெண்டி, பூசணி போன்ற மரக்கறி விதைகளே கமநல சேவை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படுகின்றன. (ச-17)


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"மனிதநேயம் மண்ணில் மரணிப்பதில்லை"



**Lion மார்க்கண்டு -கிரிதரன்**
**( அகில இலங்கை சமாதான நீதவான், முன்னாள் விமாகி உரிமையாளர் )**

**திதி - 20-03-2023**

அன்பு உருவே மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவலைகள்
ஆண்டுகள் பத்து பறந்தே ஓடோடி மறைந்திடினும்
ஓயாது உங்கள் இனிய பசுமையான நினைவலைகள்
இதயம் இத்துயர் சுமந்து கனமாய் கனக்கிறது
ஈரவிழிகள் நிறைகிறது கண்ணீர் சொரிகிறது
உயிருக்குள் உறைந்து எம் உயிரோடும் உணர்வோடும் கலந்து
எம்முள்ளே நீங்கள் என்னாளும் உயிர் வாழ்கிறீர்கள்
இனிய நினைவுகளும் இழந்த வலியும் வேதனையும்
இதயம் துடிக்கும் வரை இறுதி மூச்சுவரை எம்முன் சுமப்போம்
உயிரோட்டமான நீங்கா நினைவலைகளுடன்

**அன்பு மனைவி - றோகினி- கிரிதரன்**
**அருமை மகள் - கிரிதரன் அம்ரிஷா**

## கணக்காய்வு செய்வதற்கான கேள்விக்கோரல்

கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் சகல கணக்கு நடவடிக்கைகளையும் நல்ல முறையில் ஒவ்வொருவருடமும் காலாண்டு, அரையாண்டு, வருடாந்த இறுதி கணக்காய்வுகளை உரிய காலப் பகுதிக்குள் செய்து கணக்காய்வு அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நிறுவனங்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

தாங்கள் ஒவ்வொருவரினதும் தெளிவான கேள்விக் கோரிக்கையினை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு 30.03.2023 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது மூடுதபால் உறையில் இட்டு நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமக்கு கிடைக்கப்பெறும் கேள்விக் கோரிக்கைகள் அனைத்தும் 05.04.2023 காலை 10.00 மணிக்கு எமது முகாமைக் குழு முன்னிலையில் திறக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்

**குறிப்பு :-**
கணக்காய்வினை மேற்கொள்ள விரும்பும் கணக்காய்வு நிறுவனத்தினர் தாங்கள் நேரில் சிறுவர் இல்லத்திற்கு வருகை தந்து கணக்கு நடவடிக்கைகள் தொடர்பில் விபரத்தினைப் பெற்று தங்களின் கூறுவிலையினை குறித்த திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும்.

**அனுப்பவேண்டிய முகவரி**
**ச.மோகனபவன்**
**தலைவர்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**0773024349, 0214923118**

(CR 39478)(3/6)


# சட்டவிரோத மணல் அகழ்வு அக்கராயனில் மூவர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 20
கிளிநொச்சி - அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை கிளிநொச்சி பொலிஸார் கடந்த வெள்ளிக் கிழமை கைதுசெய்துள்ளனர்.

குறித்த பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது எனக் கிடைத்த தகவலுக் கமைய இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது. மணல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரங்களும் பொலிஸாரால் கையகப் படுத்தப்பட்டன. சந்தேகநபர்களையும் தடயப் பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (ச-10)

# விவசாயிகளுக்கு டீசல்

யாழ்ப்பாணம், மார்ச் 20
சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட டீசல் அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விவசாயிகளுக்கு கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

புத்தூர் கமநலசேவை பிரிவின் கீழ் பதிவு செய்த 630 விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 6 லீற்றர் டீசல் வீதம் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட டீசல் போதவில்லை எனவும் மேலதிகமாக டீசல் வழங்கப்படவேண்டும் எனவும் விவசாயிகள் இதன்போது கோரிக்கை விடுத்தனர். (ஒ-14)


# மரண அறிவித்தல்



**தோற்றம் 13.07.1962**
**மறைவு 19.03.2023**

## நவரட்ணம் வனமோகன்

மலைவேம்பு ஒழுங்கை சுதுமலை கிழக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் வனமோகன் அவர்கள் நேற்று (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் இராசமணி தம்பதியினரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், குயிலினி, கபில்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2023) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மலைவேம்பு ஒழுங்கை,**
**சுதுமலை கிழக்கு,**
**மானிப்பாய்.**


**தகவல் :**
**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு

01 . 11 . 1943



இறப்பு

18 . 03 . 2023

## சின்னத்தம்பி கந்தசாமி

**( சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் கிளை முகாமையாளரும், டச்சுவீதி ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம் & ஸ்ரோர்ஸ், ஸ்ரீஐங்கரன் மணிமண்டபம் ஆகியவற்றின் ஸ்தாபகரும், கிராம்புவில் படையாண்டான் தோட்ட முருகன் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் பொருளாளரும், யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க முன்னாள் கிளைத் தலைவரும்)**

மருதடி மேற்கு வீதி சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி நேற்றுமுன்தினம் (18.03.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதிகளின் ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சிவகாமி அவர்களின் அன்புக் கணவரும் நிர்மலா (ஆசிரியை- யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), நிர்மலன் (சுவிஸ்), சுபாஸ்கரன் (உரிமையாளர் ஸ்ரீ ஐங்கரன் பேக்கரி & ஸ்ரோர்ஸ் மற்றும் ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபம்), சுபாஜினி, றஞ்சி (லண்டன்), சுபேதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகதாசன் (மதுவரி உத்தியோகத்தர், மதுவரித் திணைக்களம் - சாவகச்சேரி), சிவசக்தி (சுவிஸ்), துஸ்யந்தினி,கிருபாகரன் (உபஅதிபர் யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்), அமரர் சிவகுமார் (லண்டன்), விஜியழகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரசாந் (சிற்றி சேவிஸ் நிலையம்- சாவகச்சேரி), விஸ்ணுகா (யாழ். பல்கலைக்கழகம் - வெளிவாரி), கம்சிகா (யாழ்.திறந்த பல்கலைக்கழகம்), சரணிகா (இராமநாதன் நுண்கலைபீடம்- யாழ்.பல்கலைக்கழகம்), ஆரணிகா (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நிறோஜினி (சுவிஸ்), சிவப்பிரியன் (சுவிஸ்), நிறோஜா (சுவிஸ்), ராகவி (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வர்ஷன் (யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), ஆரவி (யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), ஐங்கரன் (ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்- பதுளை), தாட்சாஜினி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), அபிஷாஜினி (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), காணன் (லண்டன்), கவின் (லண்டன்), கவீனா (லண்டன்), அகானா (கனடா) ஆகியோரின் பிரியமான பேரனும் சிவபாக்கியம், சரசம்மா, தங்கமணி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, யோகேஸ்வரி, சந்திரமதி, ரேவதி (சுவிஸ்), உதயகுமாரன் ஆகியோரின் பாசத்துக்குரிய மைத்துனரும் சரவணமுத்து, காலஞ்சென்ற முருகேசு (புகையிரத நிலைய அதிபர்), சுந்தரராசா (ஓய்வுநிலை உத்தியோத்தர்- பிரதேச செயலகம் சாவகச்சேரி), மகேந்திரன், தவக்குமார், இராஜேந்திரன் (சுவிஸ்), செல்வராணி ( ஆசிரியை யா/ மட்டுவில் ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.03.2023 புதன்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

077 2247583

தகவல்: குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்லத்துரை வீதியில் காணிகள் விற்பனைக்குண்டு. 6 பரப்பும் - 3 பரப்பும் வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்தது. (தரகர் தேவையில்லை)

**074 010 6595** (ACO CS 23812)(3/6)

## தனியார் வகுப்புக்கள்

அனைத்து தரப்பு வகுப்பினருக்கான (Grade 6 to A/L) Personal Class English Languge Eren English literature வீட்டிற்கு சென்றும். Personal Class வழங்கப்படும். தனியாகவும் குழுவாகவும்

தொடர்புகளுக்கு : T. ஞானேஸ்வரன் 534, நாவலர் வீதி.

**076 524 4793** (CS 24082)(3/6)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிறந்து பிரான்சில் வசிக்கும் 44 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. பிரான்ஸ் வதிவுரிமை பெற்றவர் திருமணம் ஆகாதவர் ராசி மிதுனம் நட்சத்திரம் புனர்பூசம் (V) இந்து மதத்தைச் சேர்ந்த அழகிய பெண்ணை யாழ். மாவட்டத்தில் இருந்து மட்டும் தேடுகின்றோம். வெளி மாவட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**Whatsup : 00447956274856**
**Email : mpact.uk@gmail.com** (ACO 23816)(3/6)

## வீடு விற்பனைக்கு

தெஹிவளை Galle Road க்கு அருகாமையில் 3 Bedroom Apartment COC உறுதியுடன் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

**077 522 2613** (ACO CS 23810)(3/6)

## The ROYAL COLLEGE of JAFFNA

தனியார் கல்வி நிலையம்

ஆண்டு 6 இல் இருந்து B.A மாணவர்கள் வரை ஆங்கில இலக்கணம், வினாவிடை Spoken English **By : N. விக்னேஸ்வரன் ஆச்சாரி** **(25 வருட அனுபவம்)**

பிரான் பற்று வீதி சங்கானை
(பழைய மீன் சந்தை அருகில்)

**077 675 1649** (CS 24086)(3/6)


## காலாவதியான பொருள்கள்: 45 ஆயிரம் ரூபா தண்டம்!

கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சி - கரைச்சி நகரப் பகுதியிலுள்ள வெதுப்பகம் ஒன்றில் காலாவதியான பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்த உரிமையாளருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வெதுப்பகத்தில் காலாவதியான பொருள்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன என்று கரைச்சி சுகாதாரப் பரிசோதகர்களுக்குக் கிடைத்த தகவலுக்கமைய வெதுப்பக நிலையத்துக்கு சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த புதன்கிழமை திடீர் சோதனையை மேற்கொண்டனர். அதன்போது காலாவதியான பல வெதுப்பக உணவுப் பொருள்கள் பொதி செய்யப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்ததை அவதானிக்கப்பட்டது.

அதனையடுத்து வெதுப்பக உரிமையாளருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு கடந்த வியாழக்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டபோது 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு கடும் நிபந்தனைகளுடன் வெதுப்பக உரிமையாளர் விடுவிக்கப்பட்டார் என்று கரைச்சி சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-14,113)


# சேவை நலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியராகப் பணி புரிந்து 31.12.2022 அன்று ஓய்வு பெற்றுச்சென்ற

**திரு. கனகரட்ணம் சிவஞானம்**

அவர்கள், அயராது அர்ப்பணிப்புடன் உழைத்து மாணவர்களை வழிகாட்டலும் ஆலோசனையும் என்ற மகத்தான சேவையினால் அன்புடன் வழி நடத்திய எமது ஆசானை இன்றைய பாராட்டு விழாவிலே இறைவன் ஆசி பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
**அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.**
**யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்.**

(CS 23939)(3/6)

## மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான பயிர்ச் செய்கை காணிகள் சிறுபோக செய்கைக்கு குத்தகைக்கு விடப்பட உள்ளது

மேற்படி எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழும் முற்கொம்பன் மிருசன் குளத்தின் கீழும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் பின்வரும் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள பயிர்ச்செய்கை காணிகளில் எமக்கு வழங்கப்பட்டுள்ள சிறுபோக செய்கைக்கான பங்குகளினை 2023ம் ஆண்டு சிறுபோக செய்கைக்கு மட்டும் வழங்குவதற்கு முகாமைக்குழு தீர்மானித்திருப்பதால் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள விரும்புவோர் காணியுடன் ஏக்கர் ஒன்றிற்கு தங்களால் வழங்கக் கூடிய ஆகக் கூடிய தொகையினைக் குறிப்பிட்டு தொலைபேசி இலக்கத்துடன் மூடு தபால் உறையில் இட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 23.03.2023 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு :-**
பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள தெரிவுசெய்யப்படும் விவசாயிகள் கோரியுள்ள குத்தகைத் தொகையினை முழுமையாக முன்குத்தகையாக செலுத்தல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

**காணிகள் விபரம்**
01. உருத்திரபுரம் 09ம் வாய்க்கால் கமக்கார அமைப்பின்கீழ் 02 ஏக்கர்
02. மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் நாகபூசணி வயல் 10ஏக்கர்
03. முற்கொம்பன் மிருசன் குளம் கமக்கார அமைப்பின்கீழ் 01 ஏக்கர்
04. மகிழங்காடு கமக்கார அமைப்பின்கீழ் உலாந்தா கமம் 14 ஏக்கர்

தொடர்பு முகவரி
**ச.மோகனபவன்**
**தலைவர்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொ.பே.இல. 077324 0950, 0214923118**

(CR 39477)(3/6)

## யா/ நீர்வேலி அத்தியார் இந்துவின் மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

Congratulations! Best Wishes



Congratulations

இன்று (20.03.2023) திங்கட்கிழமை ஓய்வுபெறும் எங்கள் பிரதி அதிபர்

**திருமதி விஜயகுமாரி ஜெயகுமார் (SLPS II)**
**(பழைய மாணவி)**

**சேவைக்காலம்**

| | | |
|---|---|---|
| ❖ வ/பட்டடை விரிந்தகுளம் அ.த.க பாடசாலை | 23.11.1989 | - 31.12.1993 |
| ❖ யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை | 01.01.1994 | - 31.12.1995 |
| ❖ வ/ பட்டடை விரிந்தகுளம் அ.த.க பாடசாலை | 01.01.1996 | - 31.12.1996 |
| ❖ வ/பட்டிக்குடியிருப்பு அ.த.க பாடசாலை | 01.01.1997 | - 31.07.1997 |
| ❖ வ/ வவுனியா மத்திய மகா வித்தியாலயம் | 01.08.1997 | - 31.12.2000 |
| ❖ வ/ கொறுத்தக்காரன்குளம் அ.த.க பாடசாலை | 01.01.2001 | - 31.12.2001 |
| ❖ வ/ தவசியாகுளம் அ.த.க பாடசாலை | 01.01.2002 | - 09.05.2002 |
| ❖ வ/ திருவள்ளுவர் வித்தியாலயம் | 10.05.2002 | - 10.02.2004 |
| ❖ வ/ மடுக்குளம் நவயோதி வித்தியாலயம் | 11.02.2004 | - 20.04.2015 |
| ❖ யா/ அத்தியார் இந்துக் கல்லூரி | 21.04.2015 | - இன்றுவரை |

*Chalk and Talk*
எனவே தொடங்கி
சோக்கான 5E முதலாய்
கவினுறு கல்விக்கென
சேவையைத் தொடர்ந்து

கற்ற அன்னையின் வளர்ச்சிக்கே
பதில் அதிபராய் பிரதி அதிபராய்
அரும்பணி நல்கியே பணிநயப்புப் பெறும்
எங்கள் விஜயகுமாரி ஜெயகுமாரே!
வாழி பல்லாண்டு! வாழி பல்லாண்டு!

*என வாழ்த்தும்:* **ஆசிரியர் நட்புறவுக் கழகத்தினர்**

**077 937 0396(பிரதி அதிபர்)**

(CS 24067)(3/6)

# சேவை நலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியையாகப் பணி புரிந்து 09.04.2022 அன்று ஓய்வு பெற்றுச்சென்ற

**செல்வி கந்தையா சாந்தகுணேஸ்வரி**

அவர்களின் சிறப்பான ஆளுமைமிக்க அரிய சேவையினை என்றும் நினைவில் நிறுத்தி எமது பாடசாலைச் சமூகம் மிகவும் அன்புடன் வாழ்த்தி, இறையாசியுடன் சீரும் சிறப்புமாக வாழ இன்றைய பாராட்டு விழா நாளில் வாழ்த்தி நிற்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
**அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.**
**யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்.**

(CS 23938)(3/6)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெள்ளை ஈ தாக்கம் தென்னையில் தீவிரம்

## யாழ்ப்பாணத்தில் பரவலாக அவதானிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 20**
**யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக தென்னைகளில் வெள்ளை ஈ தாக்கம் பரவலாக அதிகரித்துக் காணப்படுகிறது. விவசாயிகள் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்திச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுதொடர்பில் சபையின் பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தென்னை மரங்களில் வெள்ளை ஈக்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. தற்போதைய கடும் வறட்சி மற்றும் வெப்பம் போன்ற கால நிலை மாற்றங்களால் இந்தத் தாக்கம் தென்னைகளில் ஏற்பட்டுள்ளது. இதனால் தென்னைகளின் உற்பத்தி குறைவடைய வாய்ப்புள்ளதுடன் தென்னைகளும் பாதிப்புக்குள்ளாகும்.
இதனை உடனடியாகக் கட்டுப்படுத்த தென்னை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய மருந்து விசிறல் மூலம் சுமார் 418 வரையிலான தென்னை மரங்கள் தாக்கத்திலிருந்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வெள்ளை ஈக்கள் தாக்கம் அவதானிக்கப்படின் விவசாயிகள் உடன் தெரியப்படுத்தி தாக்கத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச-17)

# புதையல் தோண்ட முற்பட்டோர் கைது

## முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, மார்ச் 20
முல்லைத்தீவு - புதுமாத்தளன் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட நால்வர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சம்பவ இடத்துக்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸார் நால்வரை கைதுசெய்ததுடன் புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்ட மண்வெட்டி மற்றும் சவல் என்பவற்றையும் மீட்டனர்.
சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-19)

# சிறிரங்காவுக்கு விளக்கமறியல்!

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துத் தொடர்பான வழக்கில், சாட்சியொருவரை அச்சுறுத்தியமை, நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்கு முன்னிலையாகாமை உள்ளிட்ட காரணங்களுக்காக கைதுசெய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிறிரங்கா விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
கடந்த 17ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட அவர், நேற்றுமுன்தினம் கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.
வழக்கை விசாரித்த நீதிவான் அவரை 20ஆம் திகதிவரை (இன்று வரை) விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-110)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 20
அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம பசுபதீஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.40 மணி முதல் 10.20 மணிவரை இடம்பெறவுள்ளது.
கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அதற்கான கிரியைகள் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14,66)

# நிதிப்பற்றாக்குறைக்கு மத்தியில் முன்பள்ளிகளுக்கு திறன்பலகை

## வலி.கிழக்குப் பிரதேசசபை முன்னுதாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 20
நிதிப்பற்றாக்குறைக்கு மத்தியிலும் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் கீழ் இயங்கும் ஆவரங்கால் அரிச்சுவடி முன்பள்ளி, இருபாலை சிகரம் முன்பள்ளி, அச்சுவேலி கஜமுகன் முன்பள்ளி ஆகியவற்றுக்கு திறன்பலகைகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முன்பள்ளிகளை வலுப்படுத்தும் பிரதேசசபையின் செயற்றிட்டத்துக்கு அமைய சபை நிதிமூலம் 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் மூன்று திறன்பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
அதன்படி திறன்பலகைகள் பொருத்தப்பட்டு எதிர்வரும் வாரம் முதல் முன்பள்ளிகள் இயங்கவுள்ளன.
ஏற்கனவே எமது சபை, 10 மில்லியன் ரூபா செலவில் இருபாலை சிகரம் முன்பள்ளியை புதிதாக அமைத்துத் திறந்து வைத்துள்ளது.
அரிச்சுவடி முன்பள்ளி அமைப்புக்காக 6 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது. கஜமுகன் முன்பள்ளியும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.
மாகாண மட்டத்தில் போட்டி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சிறப்புத்தேர்ச்சிமிக்க ஆசிரியர் குழாம் ஊடாக முன்பள்ளிகள் இயக்கப்படுகின்றன.
முன்பள்ளிகளில் பல மில்லியன் ரூபா செலவிடப்பட்டு நவீன விளையாட்டு உபகரணத் தொகுதிகளும் பொருத்தப்பட்டுள்ளன.
இவற்றுக்கு மேலாக முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவச சீருடை, சத்துணவுத்திட்டம், கல்விச் சுற்றுலா என்பவற்றையும் சபை மேற்கொள்கின்றது.
வருமான ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் பிள்ளைகளும் வசதி வாய்ப்புள்ள குடும்பப் பிள்ளைகள் பெறும் வாய்ப்புக்களை பாரபட்சமின்றி பெறவேண்டும் என்ற நோக்கில் குறித்த முன்பள்ளிகளில் கல்விக்கான முதலீடுகளை நிதிப்பற்றாக்குறை சவாலையும் எதிர்கொண்டு மேற்கொள்கின்றோம் - என்றார். (ம-14)

# சங்கானையில் மோட்டர் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 20
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப் பகுதியில் நீரிறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
வீட்டு நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட மின்மோட்டர் இயந்திரமே திருடப்பட்டுள்ளது என உரிமையாளர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.
திருட்டுச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)



# பச்சிலைப்பள்ளியில் இலவச கல்வி நிலையம்

கிளிநொச்சி, மார்ச் 20
பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வண்ணாங்கேணி வடக்குப் பகுதியில் இலவச கல்வி நிலையமொன்று நேற்று ஞாயிற்றுக் கிழமை திறந்துவைக்கப்பட்டது.
'உதவும் இதயங்கள்' நிறுவனத்தால் வண்ணாங்கேணி வடக்கு கிராம பொதுநோக்கு மண்டபத்தில் குறித்த இலவச கல்வி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.
போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மாணவர்கள் இலவசமாக கல்வியைப் பெறும் முகமாக இந்த இலவச கல்வி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் வண்ணாங்கேணி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், நிதி அனுசரணையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை கையளித்தனர். (ச-113)





தலைமன்னார் பியரில் குர்ஆன் மனனம் மற்றும் இஸ்லாமியக் கல்விப் பாடத்திட்டத்துக்கான ஆரம்ப கருத்தரங்கு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி எம்.எஸ்.எம். இஹ்ஸான் ரஷாதி கலந்துகொண்டார். (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் வீரசிங்கம் பரமேஸ்வரி

தோற்றம் : 11.03.1945 மறைவு : 10.04.2021



ஆண்டுகள் இரண்டாகி
போனாலும் ஆறவில்லை எம்
துயரங்கள் வன்சொல் பேசாத
வார்த்தைகள் நிறைந்திருக்கும்
எம் மனதில் கண் முன்னே
வாழ்ந்த காலம் கனவாகி
போனாலும் கண்விட்டு
மறையாது உள்ளம்
உள்ளுக்குள்ளேயே ஊமையாய்
உருகிநிதம் வெதும்புகிறோம்
அம்மா உம் வழிகளில் தொடர்ந்து
நகர்கிறோம் அம்மா உங்கள்
ஆத்மா சாந்தி அடையட்டும்.
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**குடும்பத்தினர்**

நாவலடி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**077 983 2869**

(CS 24083) (3.6)

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் உதவிப்பணிப்பாளராகக்
கடமையாற்றி ஓய்வுபெற்ற முன்னாள்
உதவிப்பணிப்பாளரான

## திரு. இராசமாணிக்கம் இரவீந்திரன்



அவர்கள் அமரத்துவம்
அடைந்ததையிட்டு ஆழ்ந்த
அனுதாபங்களை
அவரின் குடும்பத்தினருக்கு
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மாசாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**உதவிப்பணிப்பாளரும்
பணியாளர்களும்.**

**கடற்றொழில் நீரியல் வளத்துறைத்திணைக்களம்,
மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.**

### மயக்கமருந்து...

ஒருவர் மட்டுமே வன்புணர்வில் ஈடுபட்டார் என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
யுவதியின் வீட்டுக்கு அருகில் வசிக்கும் நபர்களால் தான் இந்த வன்புணர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 20 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரை சந்தேக நபராக நேற்று மாலை கைதுசெய்தனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(அ-ம-125)

### பெண்ணொருவரிடம்...

தங்கச்சங்கிலி நேற்றுமுன்தினம் கொள்ளையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் சந்தேகநபரொருவர் இளவாலை பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் பெண்ணிடம் தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டுச் சென்ற நிலையில், இது தொடர்பில் இளவாலை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கு அமைய சந்தேநபர்களை இனங்கண்ட பொலிஸார் அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர். இந்த நிலையில் நேற்றையதினம் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பிறிதொருவர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார்.

(அ-ம-125)

# மரண அறிவித்தல்



## துரைராஜா சுந்தரலிங்கம்

(இ.போ.ச.யாழ்ப்பாணம்)

தோற்றம் 01.03.1948 மறைவு 18.03.2023

யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் விநாயகர் வீதி, நல்லூர் வடக்கினை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா சுந்தரலிங்கம் அவர்கள் கடந்த (18.03.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராஜா - கண்மணி தம்பதியினரின் செல்வப்புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சறோஜினிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற யோகலிங்கம் (சுரேன்), பவித்திரா (கனடா), விஷ்ணுபிரசாத் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுசீந்திரன் (கனடா), பிரியங்கா (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும், கமலாதேவி, சாரதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கவிதன், கரீஷன், பிரணீத், ப்ரித்திப் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 645 1692

(CS 24085) (3/6)

# மரண அறிவித்தல்

## வெள்ளையன் அகிலி



தோற்றம் : 15.07.1942 மறைவு : 18.03.2023

கைதடி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெள்ளையன் அகிலி கடந்த 18.03.2023 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் கதிரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரன் வள்ளி தம்பதியரின் அன்பு மருமகளும், சங்கரன் வெள்ளையனின் அன்பு மனைவியும் ஜெகதீஸ்வரி, சிவசுப்பிரமணியம், ஜெகமணி, மோகனச்சந்திரன், யோகேஸ்வரன், ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணமூர்த்தி, விஜயா,கணேஸ், கஜநிதி, பிறேமளா ஆகியோரின்அன்பு மாமியாரும், மிதுசன், ஆதி, அங்காரகன், மரூரன்,சாயகி, பவீசன், பவித்திரா, கயலினி, யாழவன், யாழீசன், யாகவி, யாதுரியன் ஆகியோரின் அன்புப் போத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி கிழக்கு ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கைதடி வடக்கு ,
கைதடி.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுக்கு...

நாட்டில் நீண்டகாலமாக நிலவிவந்த டொலர் நெருக்கடி தற்போது முடிவுக்கு வந்துள்ளது. தேவையான துறைகளுக்கு செலவிடுவதற்கு போதுமான அளவு டொலர் எம்மிடமுள்ளது. நாளை சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அனுமதியளிக்கும் என கருதப்படும் இலங்கைக்கான நிதியுதவி கிடைத்த பின்னர் முதலீட்டாளர்களின் ஆர்வம் அதிகரிக்கும். இதனால் இலங்கைக்கு புதிய முதலீடுகளும் டொலரும் கிடைக்கும் - என்றார். (அ-ம)

## உயர்நீதிமன்ற...

தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவுக்கு மதிப்பளிக்குமாறும் அந்த ஆணைக்குழு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான நிதியை விடுவிக்காமல் இருக்கும் செயற்பாட்டைத் தடுக்கும் வகையில் சட்டமா அதிபர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோருக்கு எதிராக உயர்நீதிமன்ற நீதியரசர்களால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு குறித்து நாடாளுமன்ற சிறப்புரிமைகள் குழுவில் ஆராயவேண்டுமெனக் கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்தவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சபாநாயகர் ஏற்றுக்கொண்டுள்ளார். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளின் மீதான அநாவசியமானதும், பாரதூரமானதுமான அத்துமீறல் என்றே நாம் கருதுகின்றோம்.

நீதிமன்றமானது அதன் சொந்த அதிகார வரம்பு மற்றும் திறன்கள் என்பன உள்ளடங்கலாக நியாயத்துவ இயல்பைக்கொண்ட அனைத்து விவகாரங்கள் தொடர்பிலும் கேள்வியெழுப்பும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது என்பதே சட்ட ஆட்சியின் அடிப்படைக் கோட்பாடாகும். எனவே உயர்நீதிமன்றம் அதன் அதிகார வரம்பெல்லைக்குள் செயற்பட்டிருக்கின்றதா என்பதை எந்தவொரு அரசியல்சார் தரப்புக்களாலும் தீர்மானிக்கமுடியாது.

அதேவேளை உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத்தடையுத்தரவு குறித்து நாடாளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பான குழு அதன் விசாரணைகளை முடிவுறுத்தும்வரை, தேர்தலுடன் தொடர்புடைய எந்தவொரு செயற்பாடுகளையும் முன்னெடுக்கவேண்டாமென சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்டமைப்புக்களிடமும் வலியுறுத்துமாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கடந்த 10ஆம் திகதி பிரதி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருப்பது குறித்து எமது தீவிர அவதானத்தை வெளிப்படுத்துகின்றோம். அதேவேளை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவு எவ்வித இடையூறுமின்றி உரியவாறு நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம்.

உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவுக்கு மதிப்பளிக்க மறுப்பதும், அதனை நாடாளுமன்றக்குழுவில் விசாரணைக்குட்படுத்துவதும் 'அதிகார வேறாக்கத்தை' மீறுவதாக அமையும். அதேவேளை, ஏற்கனவே நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை ஆபத்தான நிலையிலுள்ள நாட்டுக்கு மிகமோசமான முன்மாதிரியாகவும் அமைந்துவிடும்.

எனவே உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவதற்கான நிதி வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவுக்கு மதிப்பளிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். அத்தோடு உயர்நீதிமன்ற நீதிபதிகளை நாடாளுமன்ற சிறப்புரிமை தொடர்பான குழுவில் விசாரணைக்குட்படுத்துவதற்குத் தெரிவித்த இணக்கத்தை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு சபாநாயகரிடம் கோருகின்றோம் - என்றுள்ளது. (அ-ம)

## வங்குரோத்து...

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2022ஆம் ஆண்டு சமூகக் கட்டமைப்பின் தன்மைக்கும், தற்போதைய சமூகக் கட்டமைப்பின் தன்மைக்கும் இடையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பொருளாதாரம் ஒப்பீட்டளவில் பலமடைந்துள்ளது. ஆகவே, இலங்கை தற்போது வங்குரோத்து நிலையில் இல்லை என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

நெருக்கடியான சூழ்நிலையில் தலைமைத்துவத்தை ஏற்பதை தற்போதைய இளம் தலைமுறையினர் கற்றுக்கொள்ள வேண்டும். நெருக்கடியான சூழல் சிறந்த எதிர்காலத்துக்குப் பாடங்களைக் கற்பிக்கும். எரிபொருள், எரிவாயு, உரம் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு பெரும் நெருக்கடி காணப்பட்ட பின்னணியில்தான் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றேன். அனைத்துச் சவால்களையும் ஒரு போட்டியாகக் கருதி வெற்றி பெற்றுள்ளோம். பொருளாதாரத்தைப் பலப்படுத்த கடந்த 7 மாத காலமாக எடுத்த கடுமையான தீர்மானங்கள் சிறந்த பெறுபேற்றை வழங்கியுள்ளன.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் நாட்டின் முன்னேற்றம் உறுதிப்படுத்தப்படும். அத்துடன் ஆசிய வலயத்தில் இலங்கை பொருளாதாரத்தில் உறுதியான நாடு என்ற நிலையை அடையும். 2048ஆம் ஆண்டு இலங்கை சுபீட்சமான நாடு என்ற இலக்கை அடைய 25 வருடகால நிலையான கொள்கைத் திட்டத்தை வகுக்கவேண்டும். தற்போதைய இளம் தலைமுறையினர் நாட்டுக்காக துடிப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படவேண்டும்.

2022ஆம் ஆண்டு சமூகக் கட்டமைப்பில் காணப்பட்ட நிலைமைக்கும், தற்போதைய நிலைமைக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. 7 மாத காலத்துக்குள் அனைத்துக் கட்டமைப்புக்களும் பலப்படுத்தப்பட்டுள்ளன. அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள். எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கப்பெறுகின்றன. பொருளாதாரப் பாதிப்பு ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளது.

கடன் நிவாரணங்களுடன் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என எதிர்பார்க்கிறேன். எதிர்வரும் நாள்களில் சிறந்த வெற்றி எமக்குக் கிடைக்கும். கடன் மறுசீரமைப்புக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வருடம் செலுத்த வேண்டிய சகல அரச முறை கடன்களுக்கும் 10 ஆண்டு கால அவகாசம் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கிறோம்.

தற்போது எம்மிடமுள்ள வெளிநாட்டு கையிருப்பு அத்தியாவசிய தேவைகளுக்கு போதுமானதல்ல. ஆகவே, வெளிநாட்டுக் கடன்களை தற்காலிகமாகப் பெறவேண்டும். 4 வருட காலத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்யுமாறும், 2026ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அரச வருமானத்தை மேலதிகமாக ஈட்டிக்கொள்ளுமாறும் நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ளோம். நிலையான பொருளாதார மேம்பாடு அரசாங்கத்தின் பிரதான கொள்கையாக உள்ளது - என்றார். (அ-ம)

## ஹெரோய்னுடன்...

யில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சங்கானை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கையின்போதே இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரை சோதனைக்குட்படுத்தியபோது அவரிடமிருந்து 30 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ச-125)

## உள்ளூராட்சி...

நிறைவடைந்துள்ளது. 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி இந்த உள்ளூராட்சி சபைகள் செயற்பட ஆரம்பித்தன. அவற்றின் ஆயுள்காலம் 4 வருடங்களுக்கானதாக அமைந்திருந்தது. இந்த நிலையில் 2022ஆம் ஆண்டு அந்தச் சபைகளின் காலம் முடிவடைந்தது. இதையடுத்து கடந்த வருடம் மேலும் ஓராண்டுக்கு உள்ளூராட்சி சபைகளின் காலம் நீடிக்கப்பட்டது. அவ்வாறு நீடிக்கப்பட்ட ஓராண்டு கால எல்லையும் நேற்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது.

பதவிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில், உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் மாநகர ஆணையாளர்கள், பிரதேசசபை செயலாளர்களிடம் பாரப்படுத்தப்படும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொது நிர்வாக அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-ம-ச-இ)

## கட்சிகளுடன்...

பணிப்புடன் செயற்படுகிறோம் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கடமையாக இருந்தாலும், அதற்கு சகல நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். சுயாதீனம் என்பதற்காக ஆணைக்குழுவால் தனித்து தேர்தலை நடத்தமுடியாது. தேர்தலை நடத்த சகல தரப்பினரின் ஒத்துழைப்பும் அத்தியாவசியமானது. ஆனால், தற்போது அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பு சிக்கலாகக் காணப்படுகிறது. அனைத்துச் செயற்பாடுகளையும் ஆணைக்குழு அவதானித்து வருகிறது. தேர்தல் நடவடிக்கைகளுக்கு நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து எதிர்வரும் வியாழக்கிழமை சகல அரசியல் கட்சி செயலாளர்களுடன் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளோம். அரசியல் கட்சி செயலாளர்களுடனான பேச்சுக்களைத் தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்படும். சட்டத்தின் பிரகாரம், தேர்தலை நடத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம். நிதி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்துக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. சாதகமான பதில் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கிறோம் - என்றார். (அ-ம)

## யாழ். சிங்கள...

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாண விவசாய அமைச்சு, யாழ்ப்பாணம் கால்நடை மருத்துவமனை, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு என பல அரச நிறுவனங்கள் அரச கட்டடம் இன்றி பல ஆண்டுகாலமாக தனியார் வீடுகளில் இயங்கிவருகின்றன. இவை ஒவ்வொன்றுக்குமான மாத வாடகை ஒரு இலட்சத்துக்கும் மேல் தனியார் வீட்டு உரிமையாளர்களால் அறவிடப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் குறித்த நிறுவனங்களை உடனடியாக அரச கட்டடங்களுக்கு மாற்றுமாறு ஆளுநரால் கடந்த ஆண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததோடு யாழ்ப்பாணத்தில் இயங்காத நிலையில் உள்ள பாடசாலைக் கட்டடங்களை குறித்த திணைக்களங்களின் பயன்பாட்டுக்கு வழங்குமாறு கல்வி அமைச்சுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் திருத்தவே முடியாதபடி, மிகவும் மோசமான நிலையில் இருந்த ஓரிரு பாடசாலைக் கட்டடங்களின் விவரத்தை வெளியிட்ட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம் நகர மத்தியில் படையினர் வலுக்கட்டாயமாக கைப்பற்றி நிலைகொண்டுள்ள சிங்கள மகா வித்தியாலயக் கட்டடம் தொடர்பில் மௌனம் சாதித்து வந்தது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயப் பாடசாலைக் கட்டடத்தை முழுமையாக இராணுவத்துக்குக் கைமாற்றுவதற்கான நடவடிக்கைகளில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மத்திய கல்வி அமைச்சுடன் இணைந்து ஈடுபட்டிருக்கும் தகவல் வெளியாகியிருக்கிறது. யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் கீழ் உள்ள சிங்கள மகா வித்தியாலயம் நீண்டகாலம் இயங்காத நிலையில் இருந்தபோதும், 1995ஆம் ஆண்டு படையினர் குடாநாட்டைக் கைப்பற்றிய பின் இராணுவ 512ஆவது பிரிகேட் படை முகாமாகச் செயற்பட்டு வருகின்றது. தற்போது முகாமாக இயங்கும் பாடசாலைக் கட்டடத்தை, இராணுவத்தினருக்கே நிரந்தரமாகக் கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கோரியதன் பெயரில் சுற்றுலா மற்றும் காணி அமைச்சு, பாடசாலையைக் கையளிக்குமாறு மத்திய கல்வி அமைச்சை எழுத்தில் கோரியுள்ளது.

இது தொடர்பில் மத்திய கல்வி அமைச்சு வடக்கு மாகாண கல்வி அமைச்சிடம் சம்மதத்தைக் கோரியபோது சிங்கள மகா வித்தியாலயக் கட்டடத்தை இராணுவத்தினருக்கு வழங்குவதில் தாராளம் காட்டிய வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, குறித்த பாடசாலைக் கட்டடத்தை படையினருக்கு நிரந்தரமாக வழங்குவதற்கு தமக்கு ஆட்சேபணை இல்லை என கடிதம்மூலம் எழுத்தில் பதிலளித்துள்ளது. இதன் மூலம் யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் உள்ள சிங்கள மகா வித்தியாலயம் நிரந்தரமாக இராணுவத்தினருக்கு வழங்கப்படவுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்துடன் தீர்க்கமற்ற பேச்சுக்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 20

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது முன்னெடுத்துள்ள பேச்சுக்கள் தீர்க்கமற்றவையாகவுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருநாட்டை இயக்குவதற்கான அனைத்து இயந்திரங்களும் இயங்காத நிலையில் நாட்டை கட்டியெழுப்புவதற்கான மாற்று வேலைத்திட்டத்தை கொண்டுவர நாம் சிந்திக்க வேண்டும். அந்த வேலைத்திட்டத்தின் மூலமே வங்குரோத்தடைந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது நாட்டின் அதிகாரத்தை பொறுப்பேற்ற முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ, ஜனசவிய போன்ற பொது நலத்திட்டங்களைக் கொண்டுவந்தார். நாட்டின் வாழுவோர் தியாகம் செய்யவேண்டும்.

ஒருவேளை உணவை குறைக்க வேண்டும் என்று மக்களை கோரவில்லை. தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடனான தீர்க்கமற்ற பேச்சின் காரணமாகவே இந்தநிலை உருவாகியுள்ளது.

மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்கள் அனைத்து வகைகளிலும் சுமைதாங்கிகளாகியுள்ளனர். எதேச்சாதிகார ஆட்சி இந்த நாட்டை சீரழித்துள்ளது - என்றார். (ச-இ)

## தவறான முடிவெடுத்து முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநகர் பகுதியில் தவறான முடிவெடுத்து முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

65 வயதுடைய அந்த முதியவரின் மகன் ஒருவர் வெளிநாட்டில் வசிக்கின்றார். அவர் கட்டம்கட்டமாக அனுப்பிவைத்த ஒரு கோடி ரூபா பணத்தை அந்த முதியவர் நம்பிக்கையின் அடிப்படையில் பெண் ஒருவருக்குக் கைமாற்றாகக் கொடுத்துள்ளார். பணத்தைப் பெற்ற பெண் திரும்பிக் கொடுக்காமல் ஏமாற்றியதையடுத்தே அந்த முதியவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

## தேசியமட்ட கராத்தே

## ஜே.கே.எஸ். கழகத்தினுடைய 14 பேருக்கு கறுப்புப்பட்டிகள்!




யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கை கராத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்ட, தேசிய மட்ட கராத்தே போட்டியில் ஜே.கே.எஸ். கழகத்தின் மாணவர்கள் 14 பேர் சித்தியடைந்து கறுப்புப்பட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

ஜே.கே.எஸ். கழகத்தின் தலைமை ஆசான் சென்சை எந்திரி றொசிஹறிந் ஒழுங்கமைப்பில் அவர்கள் போட்டியில் கலந்துகொண்டனர். இலங்கை கராத்தே சம்மேளத்தின் செயலாளர் கீர்த்தி பஸ்நாயக்க தலைமையில் தேர்வுகள் நடைபெற்றன.

இதில், யசோதரன் தெசிந்தன், ரவீந்திரராசா றெமஜன், அருட்செல்வன் கபிலன், ரஞ்சன் அருள் விதுசன், சற்குணராஜா ஆசாத்கவி, ரட்ணசிங்கம் சிறிராம், ரவிச்செல்வம் துசிதன், கோணேஸ்வரன் நவலினியன், கேதீஸ்வரன் நவீன், கேதீசன் துசானன், தெய்வேந்திரன் ரசீகரன், ஜமிலா யசோதரன், ஜெயதீபா சக்திவேல், நிலோஜினி பிரதீபன் ஆகியோரே இவ்வாறு கறுப்புப்பட்டிக்குத் தகுதிபெற்றுள்ளனர். (ம)

### குளத்திலிருந்து...

சடலமொன்று மிதப்பதை அவதானித்த பொதுமக்கள் அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்கள். இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர். சடலம் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. சடலம் மீட்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சடலத்தில் துர்நாற்றம் வீசிவருவதால், அவர் ஒருசில நாள்களுக்கு முன்னரே இறந்திருக்கலாம் என்று பொலிஸாரால் சந்தேகிக்கப்படுகின்றது. உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் வவுனியா பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-18,110)

### நீதிமன்றங்களுடன்...

வ ர்கள்? அதனால் நீதிமன்றத்துடன் விளையாடுவதற்கு நி றைவேற்று ஜனாதிபதிக்கு எங்களால் இடமளிக்க முடியாது. தற்கு எதிராக சட்டத்துறை சார்ந்தவர்களாகி, நாங்கள் குரல் ொடுக்க வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தி ன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்து ள்ளார்.

வர் மேலும் தெரிவித்ததாவது:-

டத்தின் ஆதிக்கத்துக்கு எதிராக பெரும் பிரச்சினைகள் ான்றி வருகின்றன. இதில் நீதிமன்ற சுயாதீன தன்மைக்கு படுத்திக்கொண்டிருக்கும் தடைகள், நாங்கள் காணும் தான அச்சுறுத்தலாகும். நீதிமன்றத்தால் விடுக்கப்பட்டிருக் ் சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல், நீதிபதிகளை முத்தங்களுக்குட்படுத்த நிறைவேற்றுத்துறை முயற்சிக் து.

றைசார் தொழில் வல்லுநர்கள் என்ற அடிப்படையில் தற்கு நாங்கள் எதிராகச் செயற்படவேண்டும். நீதிமன்ற சுயாதீனத் தன்மை தொடர்பில் நிறைவேற்றுத்துறை தலையிடுவதற்கு நாங்கள் இடமளிக்கமுடியாது. நீதிபதிகள் தீர்ப்பு வழங்கும்போது அதுதொடர்பில் வேறு முறைமைகளைக் கையாண்டு நீதிபதிகளை அவமதிப்பதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம் - என்றார். (அ-ம)

### பன்றித்தலைச்சி...

பொங்கல் வழிபாடுகள் அதிகாலை தொடக்கம் இடம்பெறுவதற்கான ஒழுங்குகள் ஆலய தர்மகர்த்தாவால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதார வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் என ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விசேட பூசை மற்றும் பொங்கலைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்கள் ஆபணரங்கள் அணிந்து வருவதை முடிந்தவரை தவிர்த்தல் நல்லது என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை-ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் போக்குவரத்தை கவனத்திற்கொண்டு யாழ்.மற்றும் பருத்தித்துறை சாலையின் பேருந்து சேவைகள் நடைபெறவுள்ளதுடன் தனியார் போக்குவரத்து சேவைகளும் இடம்பெறவுள்ளன.

சாவகச்சேரி பிரதேசசபையினர், தென்மராட்சி பிரதேச செயலகத்தினர், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், சாவகச்சேரி பொலிஸார் உள்ளிட்ட தரப்பினர் பக்தர்களின் நலன் கருதி ஆலய வளாகத்தில் தற்காலிகப் பணிமனைகள் அமைத்து சேவையாற்றவுள்ளனர் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-ச-131)

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22, செவ்வாய் 8 இல் உள்ள அரச தொழில்புரியும் (HND-IT) மணமகனுக்கு அரச நிறுவனத்தில் தொழில் புரியும் வடமராட்சிக்குள் வசிக்கும் மணமகளைப் பெற்றோர் எதிர்பார்கின்றனர்.
தொடர்பு : 077 864 9878
Viber : 077 634 3103 (CS 24052) (3/6)

**வேலை வாய்ப்பு**
நெல்லியடி வண்ணமயில் புடைவைக்கடைக்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் பெண் விற்பனையாளர்கள் தேவை. வயது 18 - 30
வண்ணமயில் பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 077 805 2735 (CS 22939)(3/6)

**VACANCY**
•Short Film Actress
•Gender: Female
•Expect: Speach Skills
077 996 9661

**தேவை**
நெல், தேங்காய், கொப்பறா, தானியங்கள் விதைகள்
077 772 2215

**மணமகள் தேவை**
யாழிந்து (V) 30 வயது பொறியியலாளர் (Engineer) மணமகனுக்கு மணமகள் தேவை.
(CS 24076)(3/6) தொடர்பு : 077 071 1924

DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
0777 55 45 28
குறிப்பு: வேலையாட்கள் தேவை.

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் தாவடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.
K.K.S. வீதியில் இருந்து இரண்டாவது காணி.
தாவடி சந்தியிலிருந்து 100M தூரத்தில்.
தொடர்பு-076 7558 606/076 4365 814

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.